

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை நேற்று (08.04.2025) சென்னை, முகாம் அலுவலகத்தில், 2005 ஆம் ஆண்டு முதல் RCH திட்டத்தின்கீழ் தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் 3,140 தூய்மை பணியாளர்களுக்கு ஊதியத்தை ரூ.1,500 லிருந்து ரூ.5,000 ஆக உயர்த்தியமைக்கு ஆரம்ப சுகாதார நிலைய RCH ஒப்பந்த துப்புரவுப் பணியாளர்கள் நலச்சங்கத்தின் சார்பில் மரு.ஜி.ஆர்.ரவீந்திரநாத், மரு.ஏ.ஆர்.சாந்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (08.04.2025) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் தலைமையில் 2025 –2026 ஆம் ஆண்டிற்கான சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறையின் வரைவு கொள்கை விளக்க குறிப்பு மற்றும் அறிவிப்புகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நலத் துறை அரசு முதன்மைச் செயலாளர் விஜய ராஜ்குமார், சிறுபான்மையினர் நலத் துறை ஆணையர் ஆசியா மரியம் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

### தமிழ்நாட்டிலேயே எங்குமில்லாத அளவிற்கு ரூ.167.25 கோடியில்

# கோவையில் செம்மொழிப் பூங்கா விரைவில் திறக்கப்படவிருக்கிறது!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

சென்னை, ஏப்.9-

தமிழ்நாட்டிலேயே எங்குமே இல்லாத அளவிற்கு கோவையில் 10 ஏக்கர் பரப்பளவில் செம்மொழிப் பூங்கா ரூ.167.25 கோடியில் அமைய இருக்கிறது என்று சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-



**திருமதி வானதி சீனிவாசன்:** கோயம்புத்தூர் (தெற்கு) தொகுதி, 84வது வார்டில் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா? என்று உறுப்பினர் வானதி சீனிவாசன் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதில் வருமாறு:-

**அமைச்சர் கே.என். நேரு:** கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, மத்திய மண்டலம் வார்டு எண் 84க்கு உட்பட்ட அபிராமி நகர்ப்பகுதியில் மாநகராட்சிக்குட்ட இடத்தில் சத்துணவு மையக் கட்டடத்தின் அருகில், புதியதாக ஒரு நவீன உடற்பயிற்சிக்கூடம் அமைக்கும் பணிக்கு திட்ட மதிப்பீடு ரூ.25 இலட்சத்திற்கு தயார் செய்து, உடற்பயிற்சிக்கூடம் கட்டி முடிக்கப்படும்.

பல்வேறு பெரிய நகராட்சிகளிலே கோவை, சென்னை, மதுரை போன்ற பெரிய நகராட்சிகளில் இருக்கிற OSR LANDகள் எங்கெல்லாம் இருக்கிறதோ அந்த இடங்களில், அந்தப் பகுதி இளைஞர்கள், பள்ளிக் கல்லூரி மாணவர்கள் GYM வேண்டுமென்று கேட்கும்போது, GYM அமைத்து கொடுத்துக்கொண்டுதான் வருகிறோம். பூங்காவில் GYM அமைப்பதிலே எந்தவிதமான கட்டாடும் இல்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் அதற்காக தனி நிதியை ஒதுக்கித் தந்து, அதை உடனடியாக செய்ய சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, கோவையில் பார்த்தீர்களென்றால் 84 ஆவது வார்டு அருகாமையில் 86 வார்டில் புல்லுக்காடு பகுதியிலும் ஒரு ஏக்கர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு உபயோகத்திலுள்ளது. மேலும், அருகிலுள்ள வார்டு எண் 65 இல் சேதுராமன்நகர் பூங்காவில் உடற்பயிற்சி கூடங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

வார்டு எண் 83ல் நேரு விளையாட்டரங்கம் அருகில் உடற்பயிற்சிக் கூடம் ஒன்று செயல்பட்டு வருகிறது. தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர் (தெற்கு) சட்டமன்றத் தொகுதி, மத்திய மண்டலம், வார்டு எண் 84க்குட்பட்ட அபிராம் நகர்ப் பகுதியிலும், மாநகராட்சிக்குட்பட்ட இடத்தில் சத்துணவு மைய கட்டடத்திற்கு அருகிலே, இப்போது நீங்கள் சொன்ன இடத்திலே பூங்கா அமைக்கப்பட்டு, 25 இலட்சம் ரூபாய் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, கோவையைப் பொறுத்த வரை, இடம் இருக்குமானால், தேவையான இடத்தில் GYM அமைப்பதிலோ அல்லது பூங்காக்களை பராமரிப்பதிலோ பிரச்சினை ஒன்றும் இல்லை. செய்து கொடுக்கலாம்.

நீங்கள் (திருமதி வானதி சீனிவாசன்) இப்போது புதிதாக 10 இடங்களில் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு ஏற்கெனவே மக்களினுடைய உடல்நலத்தை மிகவும் கருத்தில் கொண்டு, அதனை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீங்கள் கேட்ட இடங்களில், இந்த ஆண்டு, அதற்கான பொது இடங்களில் செய்து தரப்படும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, தமிழ்நாட்டிலே மொத்தம்எந்த இடத்திலும் இல்லை. சென்னையில் கூட இல்லை. கோவையில்தான் 50 ஏக்கர் பரப்பளவிலே செம்மொழிப் பூங்கா முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 167.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தியாவில் அல்ல, தமிழ்நாட்டிலே அங்குதான் மிகச் சிறப்பான ஒரு புதிய பூங்கா அதாவது விளையாட்டரங்கம், பொது கூட்டரங்கம், மக்களினுடைய பொழுது போக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் என்னென்ன மரங்கள் இருந்தனவோ, இந்தியாவில் என்னென்ன பழமையான மரங்கள் இருந்தனவோ, அத்தனையையும் உருவாக்குகிற பெரிய பூங்காவை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

கோவைக்கு மிகப் பெரிய LANDMARKஆக அது வந்து கொண்டிருக்கிறது. தற்போது, கிட்டத்தட்ட 80 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துவிட்டன. விரைவிலே, முதலமைச்சர் அவர்களும் திறந்து வைக்கவிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, எந்த உள்ளூர் கவுன்சிலர்களும் கெடுக்க மாட்டார்கள். நீங்கள் சொல்லுங்கள். CSR FUNDஐப் பற்றி நீங்கள் சொல்கிறீர்கள். CSR FUNDஐ பொறுத்த வரை, நேரடியாக வெளியூரிலிருந்து வந்த கம்பெனிக்காரர்கள் அவர்களுடைய ஊர்களுக்கே செலவு செய்கிறார்கள். அதை நீங்கள் கேட்டு நம்முடைய அமைச்சர் முனைவர் ராஜா அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்.

அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சொல்லி, இந்த ஊரில் இருக்கிற நிறுவனங்கள் இந்த ஊரினுடைய வளர்ச்சிக்குத்தான் செயல்பட வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் முனைவர் ராஜா அவர்களும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். எனவே, CSR FUNDஐ நீங்களே கேட்டு வாங்கிக் கொடுத்தால், எந்தப் பிரச்சினையும் இல்லை. வாங்கிக் கொடுங்கள், செய்வோம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தலைமைச் செயலகத்தில் நேற்று (08.04,2025) ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் பா. மதிவேந்தன் தலைமையில் 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் வரைவு கொள்கை விளக்க குறிப்பு மற்றும் அறிவிப்புகள் குறித்த கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் கூலட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திராவிட மாடல் அரசின் பொற்கால ஆட்சியில் வரலாற்று சிறப்பு மிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்று சைதை கிழக்கு பகுதி திமுக அலுவலகம் அருகே பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி தலைமையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது நிகழ்ச்சியில் இ.முருகேசன், எஸ்.பாட்சா, வே.முருகன், ஜி.செல்வராஜ், க.உமாபதி, எஸ்.ஜே.சலாம், மோ.எழில், பு.ஜவகர்தீன், மு.முருகன், இரா.மலர்விழி, விக்டர் பென்னி கிளமண்ட், எஸ்.ராஜேந்திரன், ஆசிக்அலி, பி.பி. நாகராஜ், உ.திருவேங்கடம் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

### கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# சென்னை வடக்கு மாவட்ட இளைஞர்அணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

## கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் - அ.தா.டெக்சின் ரொமேரிரோ - ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி கண்டன உரை!

சென்னை, ஏப்.09-

சென்னை வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் இந்தி திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் (7.4.2025 திங்கட்கிழமை) மாலை 06:00 மணியளவில் பாலு தெரு, ரெய்னி மருத்துவ மனை அருகில், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை21ல் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை வகித்தார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகித்தார்.பகுதி செயலாளர்கள்: இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், வே.சிவ குமார், லயோலா. கே.மதன், வை.கௌதமன், இர.பொன்இளவரசன், இ.ரவிகுமார், க.கலைச்செல்வன், ஆகியோர் வரவேற்றனர்.

கூட்டத்தில் தலைமை கழக செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்,

கழக இளம் பேச்சாளர் அ.தா.டெக்சின் ரொமேரியோ, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம்.ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, தூத்துக்குடி.எஸ்.ஜோயல், தா.இளைய அருணா எம்.சி, டாக்டர். அ.சுபேர்கான், பி.டி.பாண்டிசெல்வம், என்.மருதுகணேஷ், ந.மனோகரன், ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலகண்ணன், மு.கோபி, க.நாகம்மை, நேதாஜி.யு.கணேசன் எம்.சி, நா.சண்முகம், கி.ராஜேந்தி ரன், வெ.சு.சத்தியநாராயணன், லயன்.எம்.தீனதயா ளன், ஏ.ரமேஷ்பாபு, லியோ.டி.சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமிவேலு, பி.செந்தில்குமார், ரெயின்போ.என்.விஜயகுமார், க.கோவிந்தசாமி, ஜெ.கே.நாதன், பா.வேளாங்கன்னி எம்.சி, விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி, கீதாசுரேஷ் எம்.சி, த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வே.மலையம்மாள், இ.மதன், இராயபுரம்.சு.சேகர், என்.ஏழுமலை, எஸ்.பி.எஸ்.புத்தன், எல்.சீனிவாசன், இரா.மருதுபாண்டியன், நெல்லை.எம்.எம்.சாமி, எரிமலைபாலு, பொன்.லட்சுமி சிவகுரு, எஸ்.ரமேஷ்,

எஸ்.எம்.சாமி, எஸ்.ராதாகிருஷ்ணன், ஜெ.புருஷோத்தமன், காட்டன். ஜி.சதீஸ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர்.பி.முருகன், பாலா லட்சுமணன், ஜெ. கௌரீஸ்வரன், வி.குமார், அத்தோ.பி.முனுசாமி, எஸ்.சுரேஷ், ஐசிஎப். பழனி, நா.பாரி, எஸ்.யுவராஜ், இரா.பொன்முடி, ந.குமார், எம்.பாலாஜி, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.முகமது மொய்தீன், எம்.பாலசுப்பிரமணியன், ஏ.அன்வர், எம்.இ. சாகுல்அமீது, டாக்டர்.ஆர்.பாண்டியராஜன், கே.என்.பார்த்திபன், எம்.டி.மதன்ராஜ், மு. சாகுல்மீரான், எஸ்.குமார், ந.ம.மகேஷ்குமார், ஜி.எஸ்.முருகன், எல்.கிருஷ்ண ஹரிஹரன், யு.அனிபா, எஸ்.மணிகண்டன் எஸ்.அசோக், பா.கதிரவன், எம்.டில்லிபாபு, சீமென்.கே.ரங்கராஜ், ஆ.ஆனந்தன்,

கோ.ஹரிஷ்குமார், ஜெ.வசந்தகுமார், வி.கே.ராஜ், மெடிக்கல்.பி.சதீஷ்குமார், கே.சிவதனுஷ், பி.பிரபாகரன், பீ.மகேந்திரன், ஜி.லோகேஷ், ஒலி ஒளி ஆ.பாபு, எம்.லோகநாதன், ர.இம்ரான், எம்.எம்.சந்துரு, த.ரவி, பி.எஸ்.வெங்கடேசன், எஸ்.கே.செந்தில்குமார், சுவீஸ்.ஆர்.இளையராஜா, சி.தமீம்அன்சாரி, எஸ்.கே.சந்திரபொம்மு , சி.லிங்கேசன், சி.மனோகரன், ஜி.கோகுல், பா.மணிகண்டன், எஸ்.குமரன், ஐடிவிங் மாரிமுத்து, ஐ.ராஜேஷ், ஆர்.சொப்ணாதேவி, ஜி.சாமுண்டீஸ்வரி, எஸ்.சூரியா, ஜெ.கார்த்திக், அலெக்ஸ்நாதன், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, ஏ.குமார், ர.கோபிநாத், கே.பாஸ்கர், கட்பீஸ்.எல்.ராஜீ, பி.சுதாகர், கே.கைலாசம், எஸ்.ராஜசேகர், ஆர்.பாரதிதாசன், வி. கலைச்செல்வன், ஏ.வேணுகோபால், எம்.மோகன்பாபு, ஜி.விநாயகம், ஏ.குமார், எம்.சௌந்தரபாண்டியன், ஏ.ஜீலியன், ப.ஆனந்தகுமார், எஸ்.எஸ்.சங்கர், வி.பிரேம்குமார், ஆர்.தங்கராஜ், கே.சி.பிரதாபன், என்.முத்து குமார், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்: பி.ரவிசங்கர், நாட்டாமை.கே.லட்சுமணன்,

எம்.என்.வெங்கட், மோ.ரவிகுமார், சு.சசிதரன், மூ.வினோத்குமார், எஸ்.பொன்னரசன், இரா.நரேஷ், என்.சுனில்குமார், ம.அருண்பிரபாகரன், கா.சீனிவாசன், பி. விஷால்ஆனந்த், வ.மொய்தீன், கு.கௌரிநாதன், அ. சந்திரசேகர், ஜி.கோதண்டராமன், ஏ.கதிரவன், வி.பிரேம்குமார், கொரியர்.எம்.முருகன், த.கு.பன்னீர்செல்வம், பா.சுதாகர், க.பாலகிருஷ்ணன், ஸ்ரீதர், எம்.தங்கராஜ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

என்.அப்துல்மாலிக், அ.சாந்தகுமார், ஆகியோர் நன்றி கூறினர்.

### தமிழ்நாடு துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணி செயலாளர் அறிவுறுத்தலின்படி

# சென்னை வடக்கு மாவட்ட பகுதி இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை வடக்கு மாவட்ட பகுதி இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்இரா.மூர்த்தி பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், க.ஜெயராமன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், அ.முருகன், இரா.இலட்சுமணன், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலகண்ணன், மு.கோபி, க.நாகம்மை வி.தயாளன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா.கே.மதன், வை.கௌதமன், இரா.பொன்இளவரசன், இரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் 09.04.2025 (இன்று) புதன்கிழமை மாலை 5 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் எஸ்.ஜோயல், சூர்யாகிருஷ்ணமூர்த்தி, விஜய்ஆனந்த் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்கின்றனர்.

எனவே, சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட புதிதாக நியமிக்கப்பட்ட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

### தலைமை: மு.இ.ஏழுமலை - முன்னிலை: நந்தனம் கி.மதி

# 123வது வட்டக் கழகம் சார்பில் தண்ணீர் பந்தல்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப். 09-

கழக தலைவரும் - தமிழ்நாடு முதல்வர் ஆணைக்கிணங்க சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123வது வட்ட கழகத்தின் சார்பில் வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை திறப்பு விழா நாளை (10-04-2025 - வியாழக்கிழமை) மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்.

இதில் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. சிறப்பிக்கின்றார்.

இந்நிகழ்ச்சியில் வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகி கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் மகளிர் அணியினர் கழக மூத்த முன்னோடி கள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் விபரம் வருமாறு:

வட்ட பொருளாளர் எஸ்.மாரிமுத்து, பகுதி பிரதிநிதி மு. குப்பன் ஆகியோர் ஏற்பாட்டில் திருவள்ளுவர் சாலை கே.பி.தாசன் ரோடு சந்திப்பில் நடைபெறுகிறது.

வட்ட இளைஞர் அணி எஸ். கணேஷ், வர்த்தக அணி ஜி.ராஜி என்கிற முத்து மாடசாமி ஆகியோர் ஏற்பாட்டில் டி.கே.கே. சாலை, எல்டாம்ஸ் ரோடு சந்திப்பில் நடைபெறுகிறது.

நெசவாளர் அணி மாவட்ட தலைவர் கு.ராஜி (என்கிற) கே.கே.கே. கிருஷ்ணராஜ்,

ஏற்பாட்டில் எல்டாம்ஸ் ரோடு ராமலிங்க கோயில் தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.

மாவட்ட துணை அமைப்பாளர் தகவல் தொழில் நுட்ப அணி வசந்த் கபாலி ஏற்பாட்டில் சென்மேரிஸ் ரோடு சந்திப்பில் நடைபெறுகிறது.

தேனை பி, பார்த்திபன் வட்ட துணை செயலாளர் ஏற்பாட்டில் அண்ணா சாலை அன்பகம் எதிரில் நடைபெறுகிறது.

ஏ.விஜயகுமார், என். முனீஸ்வரன், என்.மகேஸ்வரன்ஆகியோர் ஏற்பாட்டில் டாக்டர் ரங்கா ரோடு பீமனப்பேட்டை 2வது தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.



சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞரணி சார்பாக கிராண்ட் லைன் ஊராட்சியில் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.குறளரசன் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் கோடை வெப்பத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் நீர் மோர் பந்தலை கழக மாநில இளைஞர் அணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல் திறந்து வைத்தார். உடன் புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ், கிளைச் செயலாளர் சி.சுதாகர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செ. யுவராஜ், மாவட்ட பிரதிநிதி நா. ஜெகதீசன்,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் மா. மணி ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டேவிட் நாவலன், பிரேம், மணிமாறன், ஐயப்பன், அஸ்வின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மற்றும் கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் கழகத் தொண்டர்கள் பங்கேற்றனர்.